**UNIVERSITY OF PERADENIYA**

**CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION**

**ශාස්ත්‍රවේදී උපාධි (බාහිර - නව නිර්දේශය-පරීක්ෂණය 300 මට්ටම - සැප්තැම්බර් 2022**
கலைத்தேர்வுப் பரீட்சை) வெளிவாரி-புதிய பாடத்திட்டம் (300 வது தேர்ச்சி மட்ட பரீட்சை - செப்டம்பர் - 2022

**Bachelor of Arts (External - New Syllabus) Examination 100 Level – September - 2022**

# தமிழ் எழுத்தாற்றல்

## WRITING SKILLS IN TAMIL

SUPE 106

කාලය පැය (03) තුනයි.
மூன்று) 03) மணித்தியாலங்கள்

Time three (03) Hours.

නොපැහැදිලි අත් අකුරුවලට ලකුණු කපනු ලැබේ.
எழுத்து தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்.
Marks will be deducted for illegible hand writing.

ප්‍රශ්න --05---- ට පිළිතුරු සපයන්න.
-----05- வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.
Answer ---05--- questions only.

මෙම ප්‍රශ්න පත්‍රයේ අඩංගු ප්‍රශ්න සංඛ්‍යාව-----07------ කි
இந்த வினாப்பத்திரத்தில் ----07--- வினாக்கள் உள்ளன.
There are --07----- questions in the question paper.

பகுதி I இல் சகல வினாக்களுக்கும் பகுதி II மற்றும் பகுதி III இலிருந்து தலா ஒரு வினாவுமாக தெரிவுசெய்து மொத்தமாக ஐந்து (5) வினாக்களுக்கு விடை தருக.

### பகுதி 1

1. பின்வருவனவற்றுள் யாதேனும் ஒரு தலைப்பைத் தெரிந்து, 300 – 350 சொற்களில் கட்டுரை எழுதுக.

அ) நாட்டின் பொருளாதார நிலையும் சமுதாயப் பிரச்சினைகளும்

ஆ) இலங்கைத் தமிழ் ஊடகங்களில் தமிழ்மொழியின் நிலை

இ) சமுதாய முன்னேற்றத்தில் கலை இலக்கியங்களின் பங்களிப்பு

ஈ) உலகை உலுக்கும் பிரச்சினைகள்

உ) ஆறுவது சினம்

2. பின்வரும் உரைப்பகுதியை 50 சொற்களுக்குள் சுருக்கி எழுதுக.

பிஹார், ஹரியானா, ஹிமாசலப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான், உத்தரப் பிரதேசம், உத்தராஞ்சல், சத்தீஸ்கர், டெல்கி முதலான மாநிலங்களில் பேசப்படும் மொழி, ஹிந்தி. இந்தியாவில் ஏறத்தாழ 30% மக்களுக்குத் தாய்மொழியாக இருக்கிறது, இம்மொழி. இந்தியாவைத் தவிர, மொரிசியஸ், சூரினாம், ஃபிஜி, தென் அமேரிக்காவின் சில பகுதிகள் ஆகிய

இடங்களிலும் சிலர் இம்மொழியைப் பேசுகின்றனர். ஏறத்தாழ கி.பி. 1500 க்குப் பிறகுதான் இன்றைய ஹிந்தி உருவாகத் தொடங்கியது. அது சொற்களை சம்ஸ்கிருதத்திலிருந்து கடன்வாங்கிக் கொண்டது. பக்தி இலக்கிய காலத்தில் ஹிந்தி, ஹிந்துஸ்தானி என வழங்கப்பட்டது.

முகலாயர் ஆட்சிக்காலத்தில், அவர்களது அரசவை மொழி பாரசீகமாக இருந்த காரணத்தால், பாரசீகச் சொற்கள் பெரிய அளவில் ஹிந்தியில் புகுந்தன. பின்னர், அராபிய மொழிச் சொற்களும் ஹிந்தியில் கலந்தன. இம்மாதிரிக் கலப்பு ஏற்பட்டதன் பின்னர், ஹிந்துஸ்தானி என்ற வழக்கு கைவிடப்பட்டு, ஹிந்தி என்றே வழங்கப்படலாயிற்று. இன்றைய ஹிந்தியில் ஆங்கிலத்தில் இருந்தும் பல சொற்கள் கடன்வாங்கிச் சேர்க்கப்பட்டுள்ளன.

பத்தொன்பதாம் நூற்றாண்டு ஹிந்தி இலக்கிய வளர்ச்சியில் முக்கிய காலகட்டமாக விளங்குகிறது. பல இலக்கியவாதிகள் தோன்றி, ஹிந்தி இலக்கிய வளர்ச்சிக்கு உதவினர். ஹிந்தியில் பரதேந்து ஹரிச்சந்திரவின் படைப்புகள் உயர்வானவை. மஹாவீர் பிரசாத், தற்கால ஹிந்தி உரைநடையைத் தோற்றுவித்தவர். முதல் உலகப் போருக்குப் பின்னர்தான் நவீன ஹிந்தி தொடங்குகிறது. நவீன ஹிந்தி இலக்கிய வளர்ச்சியில் பல இலக்கியவாதிகளின் பங்களிப்புகள் சிறந்து விளங்குகின்றன.

**3. பின்வரும் உரைப்பகுதியை வாசித்து, அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

மனிதனின் ஆரம்ப வளர்ச்சி மிகவும் மந்தமாக இருந்தது. ஆனால், அக்காலச் சூழ்நிலையில் அந்த வளர்ச்சியே மிகவும் முக்கியத்துவம் நிறைந்ததாய் இருந்தது. மனிதனின் கைகளிலும், மூளையிலும், குரலிலும் 'மனிதன் மிருகமல்ல. அவன் மிருகத்திலிருந்து வேறுபட்ட ஒரு தனிப் பிராணியாகும்' என்று நாம் கூறுமளவுக்கு என்ன மாறுதல் நிகழ்ந்துவிட்டதென்ற கேள்வி எழலாம். உயிர் வாழ்வதற்கான முயற்சி, உயிரின வளர்ச்சியில் முக்கிய பங்கு வகித்ததென்பது, வளர்ச்சி சித்தாந்தத்தை அறிந்தவர்களுக்குத் தெரியும். முயற்சி என்பது ஒருவித உழைப்பேயாகும். ஆகவே, உழைப்பே மனித வளர்ச்சியினைச் சாதித்ததென்றும் நாம் கூறலாம். ஆனால், இவ்வளர்ச்சி இயற்கையின் உதவி இல்லாமலேயே சாதிக்கப்பட்டதென்று சொல்லமுடியாது.

நிலவியல் ஆராய்ச்சியாளர்கள் 'மூன்றாம் யுகம்' என்று குறிப்பிடும் காலத்திற்கு முன்பு, இலட்சக்கணக்கான ஆண்டுகள் மறைந்துவிட்டிருந்தன. இந்த யுகத்தின் கடைசிப்பகுதியில் காட்டு மனிதர்களின் மிக வளர்ச்சியடைந்த ஓர் இனம், பூமியின் ஒரு பெரும் தீவில் இருந்துவந்தது. அத்தீவு அநேகமாக இந்துமாக்கடலில் மூழ்கிவிட்டிருக்கலாம். இவர்களே மனித இனத்தின் முன்னோர்கள் ஆவர். இவர்களது உடல் முழுவதும் உரோமம் வளர்ந்திருந்தது. மூக்கு நீண்டிருந்தது. இவர்கள் கும்பல் கும்பலாகச் செடிகளிலும், மரங்களிலும் இருந்துவந்தனர்.

அவர்களது வாழ்க்கையில் பின்னங்கால்களுக்கு இருந்த முக்கியத்துவம் கைகளுக்கு இருந்ததில்லை. ஆனால், பிற்காலத்தில் மரக்கிளைகளைப் பற்றிக்கொள்வதிலும், பழங்களைப் பறித்துக்கொள்வதிலும், இதுபோன்ற மற்ற வேலைகளைச் செய்வதிலும், அவர்கள் தமது கைகளைக் கால்களினின்றும் வேறுபடுத்திக்கொண்டுவிட்டனர். அவர்கள் சமநிலையான பூமியின்மீது நடக்கும்போது, கைகளை மேலே உயர்த்தி, பின்னங்கால்களைக் கொண்டு மட்டுமே நடந்தனர். கீழே விழாமலும், தடுமாறாமலும் இருக்க, தோள்களை நேராக நிமிர்த்தி நிற்க முயற்சித்தனர். காட்டுமனிதனில் இருந்து சாதாரண மனிதனாக மாறுவதில், விடுதலை பெற்ற கைகளும், நிமிர்ந்த தோள்களும் சிறப்பான பங்கு வகித்தன.

காலப்போக்கில் காட்டுமனிதர்களும் கூட நேராக நிமிர்ந்து நிற்க முடிந்தது. அவர்கள் தமது கால்களின் துணைகொண்டு எழுந்துநிற்க முடிந்தது. ஆனால், அவர்கள் மிகப்பெரும் அவசியம் ஏற்படும்போதே அப்படிச் செய்தனர். ஆனால் நம்மைப் போன்ற தன்னம்பிக்கையுடன் அவர்களால் அப்படிச் செய்யமுடியாது. கைகள் உடல் முழுவதையும் தாங்கிக்கொள்ளவேண்டியதில் இருந்து விடுபட்டதும், அவைகளை மற்றக் காரியங்களுக்காகப் பயன்படுத்த முடிந்தது. காட்டுமனிதர்களிலும் கை, கால்களின் வேலைகளில் மாற்றத்தைக் காணலாம். காட்டுமனிதன் கைகளால் பழங்களைப் பறித்துச் சேர்த்துவைத்துக்கொள்கிறான். காட்டுமனிதனைக் காட்டிலும் சாதாரண மனிதனின் கைகளில் நாம் காணும் செயல்திறமை, ஆயிரக்கணக்கான ஆண்டுகளின் உழைப்பின் பலனே ஆகும். காட்டுமனிதன், சாதாரண மனிதன் ஆகியோரின் கைகளையும், நரம்புகளையும், இணைப்புகளையும் ஆராய்ந்தால், இருவரிலும் எவ்வித வேற்றுமைகளும் இல்லாதது தெரியவரும். ஆயினும், வளர்ச்சியில் காட்டுமனிதன் மிகவும் பின்தங்கி இருந்துள்ளான்.

1) இவ்வுரைப்பகுதியின் பிரதான கருத்தினை விளக்குக.

2) மனித சமுதாயத்தின் வளர்ச்சி எத்தகையதாக இருந்துள்ளது?

3) உழைப்பே மனித வளர்ச்சியைச் சாதித்தது என்று நாம் கருதலாமா?

4) காட்டுமனிதனுக்கும், சாதாரண மனிதனுக்கும் இடையிலான வேறுபாடுகளை விளக்குக.

5) உரைப்பகுதியின் சுருக்கத்தை இருபத்தைந்து சொற்களில் எழுதுக.

## பகுதி 11

**4. பின்வரும் வாக்கியங்களுக்குப் பொருத்தமான நிறுத்தற் குறியீடுகளை இட்டு, வாக்கியங்களை மீள எழுதுக.**

1. இராமன் இலட்சுமணன் பரதன் சத்துருக்கன் ஆகியோர் தசரதனின் பிள்ளைகள்
2. ஐயோ என்னால் பொறுக்கமுடியவில்லையே
3. சுவாமி விபுலாநந்தர் பேராசிரியராக விளங்கினார் பத்திரிகை ஆசிரியராக விளங்கினார் ஆய்வாளராக விளங்கினார் கவிஞராகத் திகழ்ந்தார்
4. கதை வசனம் பாடல்கள் இசை ஒளிப்பதிவு இயக்கம் ரி ராஜேந்தர்
5. நானும் உங்களுடன் காட்டுக்கு வருகிறேன் என்றாள் சீதை
6. இந்தியச் சிப்பாய்க் கலகம் 1857 இந்திய வரலாற்றில் முக்கியத்துவம் பெற்ற ஒன்றாகும்
7. இன்றைய பரதநாட்டியத்தில் முக்கியமாக இடம்பெறும் அம்சங்கள் பின்வருமாறு அலாரிப்பு ஜதீஸ்வரம் சப்தம் வர்ணம் பதம் தில்லானா
8. வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கு உழைப்பு அவசியம் என்று பேச்சாளர் குறிப்பிட்டார்
9. பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்க என்று அவர் வாழ்த்தினார்
10. நாளும் பொழுதும் நலமாக வாழ்வதற்கு ஏன் இந்தத் தயக்கம்

**5. பின்வரும் வாக்கியங்களில் காணப்படும் வழுக்களையும், மயக்கங்களையும் சுட்டிக்காட்டி, வாக்கியங்களைத் திருத்தி எழுதுக.**

(அ) ஒவ்வொரு அரசியல் கட்சிகளும் தனித்தனிச் சின்னங்களில் போட்டியிடுகின்றன.

(ஆ) இன்றைய அவசரயுகத்தில் மக்கள் இளம்பிள்ளைகளாக வாழ்வதற்குத் தியானம் உதவி செய்யும்.

(இ) கல்வியின் அடிப்படை, சிறந்த மனிதன் ஒருவனை உருவாக்குகின்றது என்று அறிஞர் கருதிக்கொள்கின்றனர்.

(ஈ) கடுமையான வெயில் எறித்த ஒரு பங்குனி மாதத்தின் நள்ளிரவில், அவனது தாய் புற்றுநோய் வந்து திடீரென இறந்துபோனாள்.

(உ) தொடர்ந்து ஐந்தாவது நாட்களாக நடந்த வேலைநிறுத்தத்தால் தொழிலாளர் மிகவும் பாதித்தனர்.

(ஊ) இந்த வைத்தியசாலையில் நோயாளிகளை நம்பி விட்டுச்செல்லலாம்.

(எ) ஆண்டுதோறும் மறைந்த கண்ணதாசன் நினைவாகக் கூட்டம் நடைபெறும்.

(ஏ) அரச அதிகாரிகள் வெள்ளம் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்த்துப் பார்வையிட்டனர்.

(ஐ) பிள்ளைப்பேறுகளுக்குக் குறைந்தது இரு வருடகால இடைவெளி வைத்துக்கொள்வதோடு, 18 வயதுக்கு முன்னரும் கர்ப்பம் தரிப்பதைத் தவிர்ப்பதும் நல்ல நல்லது.

(ஒ) விசுவாமித்திரர் காட்டுக்குப் போய்ச் சென்று, செய்யத்தொடங்கிய கொடிய தவத்தைக் பார்த்தும் கண்டும் தேவர்கள் அஞ்சிப் பயப்பட்டனர்.

## பகுதி 111

6. நாட்டின் இன்றைய நிலையில், இனங்களுக்கு இடையே ஒற்றுமை பேணப்படும் அவசியம் குறித்த உமது கருத்துகளை, பத்திரிகை ஒன்றின் ஆசிரியருக்கு 150 சொற்களில் கடிதமாக எழுதுக.

**7. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினுக்குச் சிறுகுறிப்பு எழுதுக.**

அ. புனைகதை உரையாடல்களில் பேச்சுமொழிப் பயன்பாடு

ஆ. தாய்மொழிக் கல்வி

இ. மொழி ஆற்றலை வளர்த்தல்

ஈ. செந்தமிழும் நாப்பழக்கம்